வேலூர் விற்பனைக்குழு செயலாளரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்:- திரு.கண்ணன்,

ந.க.எண்:ஆ/5272/2023-3 நாள்: 14.11.2024

பொருள்: பணிக்குழு -வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (நேரடி நியமனம்) - இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கு ஒருங்கிணைந்த குடிமை பணி தொகுதி 4 தேர்வில் தேர்ச்சி பெற்ற (தேர்வு நாள்: 24.07.2022) நபர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது வேலூர் விற்பனைக்குழுவிற்கு பணியிட ஒதுக்கீடு செய்யப்பட்டது - பணி வரன்முறை ஆணையிடல் - தொடர்பாக

பார்வை:

1. இயக்குநர் வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, சென்னை அவர்களது செயல்முறை ஆணைகள் எண் விகுப3/26022/2023, நாள்: 13.09.2023
2. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடித எண்: 1915/PSD-D1/2023, நாள்: 25.08.2023
3. செயலாளர், வேலூர் விற்பனைக்குழு அவர்களது செயல்முறை ஆணை எண் ஆ/5272/2023-3, நாள்- 26.09.2023

####

ஆணை:-

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி 4 கீழ் வரும் இளநிலை உதவியாளர் பதவிக்கான எழுத்துத் தேர்வில் தேர்ச்சி பெற்று தற்காலிகமாகத் தேர்வு செய்யப்பட்ட **திரு.ஜெ.நரேஷ்குமார்**. அவர்கள் பார்வை (1) செயல்முறை ஆணை மற்றும் 2-இல் கண்ட கடிதம் வாயிலாக வேலூர் விற்பனைக்குழுவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டார்.

பார்வை 3-இல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின் வாயிலாக வேலூர் விற்பனைக்குழுவின், தலைமையலுவலகத்தில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் நியமிக்கப்பட்டார். இவர் மேற்படி பணியிடத்தில் 04.10.2023 மு.ப பணியில் இணைந்ததைத் தொடர்ந்து, இவரது பணியினை அவர் பணியில் இணைந்த நாளிலிருந்து கீழ்க்காணுமாறு பணிவரன்முறை செய்தும், இளநிலை உதவியாளர் பதவியில் மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் ஈரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது

| பெயர் மற்றும் பதவி | பணியில் இணைந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் | தகுதிகாண் பருவக்காலத்தில் வைக்கப்படும் நாள் |
|---|---|---|---|
| திரு.ஜெ.நரேஷ்குமார், இளநிலை உதவியாளர், தலைமையலுவலகம், வேலூர் விற்பனைக்குழு வேலூர் | 04.10.2023 மு.ப | 04.10.2023 மு.ப | 04.10.2023 மு.ப |

மேற்படி தகுதிகாண் பருவகாலத்தில் இவர் கீழ்க்காணும் தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என அறிவிக்கப்படுகிறது.

1. வேளாண்மை விற்பனைத் துறை தேர்வு
2. தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு
3. அரசு அலுவலர்களுக்கான பவானி சாகர் அடிப்படை பயிற்சி.

இப்பணிவரன்முறையானது தொகுதி 4–இன் 2022 ஆண்டுக்கான பணிநியமனங்கள் குறித்த, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நிலுவையிலுள்ள வழக்குகளின் தீர்ப்புரைகளுக்கு உட்பட்டது என அறிவிக்கப்படுகிறது.

இப்பணிவரன்முறை ஆணையினைப் பெற்றுக் கொண்டமைக்கான உரிய ஒப்புகையை தலைமையலுவலகத்திற்கு சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படுகிறது.

14/11/2024

செயலாளர்,
வேலூர் விற்பனைக்குழு,
வேலூர்.

14/11/2024

14/11/24

பெறுநர்:-
சம்பந்தப்பட்ட பணியாளர்(உரிய வழிமுறையாக).

நகல்:- 1. இளநிலை உதவியாளர் 'அ1' இருக்கை
2. மேற்பார்வையாளர் "ஆ" இருக்கை
3. பணிப்பதிவேடு

உதிரி–1